2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட (பக்கங்களின் எண்ணிக்கை : 2)
மாணவ-மாணவியருக்கு மட்டும்)

**SUBJECT CODE** **22 UTM 1A1**

**REG.NO**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : டிசம்பர் – 2022**

**பி.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 50**

**முதல் பருவம்** **நேரம் : 3 மணி**

## பகுதி – III

## தமிழக வரலாறும் பண்பாடும்

**பகுதி – அ** **(10 x 1 = 10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. நகரங்களும் நாடுகளும் உருவாகக் காரணமாயிருந்த நில அமைப்பு எது?
   அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்
2. ‘‘அன்புடைநெஞ்சம் தாம்கலந்தனவே’’- இப்பாடலடி இடம்பெற்றுள்ள நூல் எது?
   அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) ஐங்குறுநூறு ஈ) கலித்தொகை
3. ‘மதுரைக்கணக்காயனார் மகன்’ -எனச்சுட்டப்படுபவர் யார்?
   அ) நக்கீரர் ஆ) இளம்பூரணர் இ) தொல்காப்பியர் ஈ) ஓரம்போகியார்
4. இருங்கோவேளிடம் பாரிமகளிரை மணந்துகொள்ளும்படிக் கேட்டவர்யார்?
   அ) நக்கீரர் ஆ) ஔவையார் இ) கபிலர் ஈ) பிசிராந்தையார்
5. ‘பெண்மதிமாலை’ - நூலின் ஆசிரியர்யார்?
   அ) மாயூரம் வேதநாயகம் ஆ) இராமலிங்கஅடிகளார்
   இ) இன்குலாப் ஈ) காந்தியடிகள்

**ஓரிருசொற்களில் விடையளி.**

6. பகைவருடைய மதிலைச் சுற்றி வளைத்து முற்றுகையிடுவது -------- திணை.
7. ஒருதலைக்காமம் எனச் சுட்டப் பெறுவது எது?
8. .........காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம் என்பன சிறுபொழுதுகள்.
9. அன்றைய தமிழ்நாடு அரசியலால் எத்தனை பெருநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது?
10. பாலைநிலத் தெய்வம் எது? (த.பி.பா.)

**பகுதி – ஆ** **(5x3=15 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)**

11. அ) நாகரிகம் - விளக்கம் தருக.

**(அல்லது)**

ஆ) தமிழகத்தில் விளங்கிய நெசவுத் தொழில் பற்றிக் குறிப்பிடுக.

12. அ) அன்பின் ஐந்திணைகளின் பெயர்களைச் சுட்டுக.

**(அல்லது)**

ஆ) பண்டைத் தமிழகத்தில் உழவர்களின் வீடுகள் எவ்விதம் அமைந்திருந்தன?

13. அ) தை நீராட்டு பற்றிக் குறிப்பிடுக.

**(அல்லது)**

ஆ) பெரும் பொழுதுகள் ஆறினை எழுதுக.

14. அ) தமிழரின் ‘‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’’ - என்ற மனப்பாங்கினை விளக்குக.

**(அல்லது)**

ஆ) துணங்கைக் கூத்து குறித்து எழுதுக.

15. அ) பல்லவர் காலச் சமுதாயத்தில் பெண்களின் நிலை யாது?

**(அல்லது)**

ஆ) தமிழ்ப் பண்பாட்டில் தாலாட்டுப் பாடல்கள் பற்றி எழுதுக.

**பகுதி - இ** **(5x5=25 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.**

16. அ) வெட்சி,வஞ்சி,உழிஞை,தும்பை,வாகை,பாடாண்,காஞ்சித்திணைகளை விவரி.

**(அல்லது)**

ஆ) சங்ககாலத் தொழில் முறைகள் பற்றி விவரி.

17. அ) சிலம்பு கழித்தல்,மலரணிதல் குறித்து விளக்குக.

**(அல்லது)**

ஆ) பண்டைத் தமிழரின் வாழ்விலமைந்த களவும் கற்பும் குறித்து விரித்துரைக்க.

18. அ) பண்டைத் தமிழரின் விளையாட்டுகள் பற்றி விவரிக்க.

**(அல்லது)**

ஆ) பழந்தமிழரின் வானியல் அறிவைக் கட்டுரைக்க.

19. அ) பழந்தமிழரின் நம்பிக்கைகள் விளக்கி வரைக.

**(அல்லது)**

ஆ) தமிழர் உலகிற்குரைத்த நல்லறங்களை எடுத்தியம்புக.

20. அ) வாய்மொழி இலக்கியங்களின் வழியே வெளிப்படும் தமிழ்ப் பண்பாட்டைப் புலப்படுத்துக.

**(அல்லது)**

ஆ) பழமொழியும் பண்பாடும் எனும் தலைப்பில் கட்டுரை வரைக.

(((((

*ETHICAL PAPER*